பார்த்தசாரதிஐயங்காரவர்கள் பொன்னேரி.	2	12	,,
இராமசுவாமிஐயரவர்கள் Singer.	1	12	,,
கிருஷ்ணசாமிஐயங்காரவர்கள்கோயமுத்தூர்.	2	12	,,
பி. வெங்கடேசுவர ஐயரவர்கள் மேலூர்.	3	,,	,,
வெங்கிடசாமிநாயகரவர்கள் சாத்தூர்	2	12	,,
இராகவஐயரவர்கள் பாபநாசம.	2	12	,,
சுப்பிரமணியஐயரவர்கள் மைசூர்.	,,	4	,,
சுப்பிரமணியஐயரவர்கள் திருவனந்தபுரம்	2	12	,,
சிவானந்தசுவாமிகள் திருவாலூர்.	2	12	,,
என். சண்முகப்பிள்ளையவர்கள்நாகபட்டணம்	2	12	,,
டி-என்-நாராயணசாமிபிள்ளை தூத்துக்குடி	2	12	,,
H. H. உதயவர்மராஜா அவர்கள் நார்த்மலபார்.	2	3	,,
கிஷ்ணமாசாரியார் அவர்கள், தூத்துக்குடி.	2	12	,,
சாம்பமூர்த்திஐயரவர்கள் பல்லாரி.	2	12	,,
சக்கிரபாணிஐயரவர்கள் நாகை.	2	12	,,
ரெத்தினசபாபதிப்பிள்ளை நாகை.	2	12	,,
சுப்பிரமணியஐயரவர்கள் நாகை.	2	12	,,
மகாதேவஐயரவர்கள் ஷை	2	12	,,
என்-பி-சுப்பிரமணியஐயரவர்கள் ஷை	2	12	,,
வி. அருணசலசெட்டியார் அவர்கள் ஷை	2	12	,,
ரத்தினசிங்கு அவர்கள் மாண்டலே.	2	12	,,
ஸ்ரீநிவாச ஐயங்காரவர்கள் செங்கிரிதுருக்கம்	1	4	,,
சிரங்கசெட்டியார் அவர்கள்பொள்ளாச்சி.	1	8	,,
குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் கூடலூர்.	2	12	,,
கே. வெங்கிட்டராமையரவர்கள் ஷை	1	6	,,
கே. இராமசுவாமி ஐயரவர்கள் நெல்லூர்	2	12	,,
அண்ணுசாமிசாஸ்திரிகள் யாழ்ப்பாணம்.	2	12	,,
சாம்பமூர்த்திப்பிள்ளை அவர்கள் சேவக் கோட்டை மதுரா ஏரிப்பாளையம்.	2	12	,,
ஜி. சுந்தரமையர் அவர்கள் பழனி.	1	6	,,
அப்பா-சீதாராமையரவர்கள் வேயுளயாத்தூர்	1	,,	,,
மாரிமுத்தாசாரியாரவர்கள் பீமநகர்	1	8	,,
பி. கே. நாராயணஐயரவர்கள் பெரியகுளம்	,,	14	,,
சுந்தரேசுவாஐயரவர்கள் மெரட்டூர்.	1	8	,,
புட்டா-அருணசலசெட்டியார்வாணியம்பாடி.	1	,,	,,
சிவராமசெட்டியார்அவர்கள் பெரியகுளம்	2	12	,,
சங்கரசாஸ்திரிகள் சங்கரநயினர்கோவில்.	2	12	,,
எ. கிருஷ்ணையரவர்கள் காளயார்கோவில்.	1	6	,,

ப்ரம்மவித்தியா பத்திரிகை.

ப்ரம்மவித்தியா பத்திரிகையை வண்ணுனுக்குப் போட்டீர்கள்போலும்! அவன் அதை வெளுத்துக்கொண்டுவரக் கொஞ்சம் தாமதமாயினும் நன்றாய்ச் சலவைசெய்திருக்கிறான். அதை உத்தேசிக்கின் அந்தத் தாமதமொருபொருட்டல்ல. இது ஆரியாசாரப் பிரகடனையின் பலிதார்த்தமேயாகும். தீபாவளிக்காகப் புது வேஷ்டி வாங்கினதுபோலுமாகும். எவ்விதத்திலும் சுசி, ருசியே ஆசாரத்தின் கருத்து. தமது பத்திரிகையில் ருசியிருந்தும் சுசி போதாமலிருந்தது. சுசியில்லா ருசி கொஞ்சம அசமாதானமாயிருக்கக்கூடும். இப்பொழுது அது சுசி ருசியுடன்கூட யிருத்தலால் அநேகர் அதை வாங்கிப்படித்து அதன் பலனை யனுபவிப்பாரென்று நம்புகின்றேன். ப்ரம்மவித்தையின் உத்தேசமே ஆனந்தம். அதைப் பயிலுவோர்க்குத் துணைக்கருவியாகிய இந்தப்பத்திரிகையும் அதற்குத் தக்கபடி நல்ல உடுப்புகளுடன் ஆனந்தகரமாகவேயிருக்கின்றது.

திருவையாறு - அ. சுவாமிநாதையர், பல்லாரி.

ப்ரஹ்மவித்யாக்ஷரஶாலாயாம் விக்ரயார்த்தானி புஸ்தகானி.

வேதஸித்தாந்ததீபம்	௦	கஉ	௦
ஶ்ருதித்ரயஸந்த்ரகாஶிகா வ்யாக்யா	௦	க	௦
ஶ்ரீபோதாயந ஸம்ப்ரதாயாஷ்டகம்.	௦	க	௦
ஶிவதத்த்வவிவேகஸஹித ஶிவகர்ணாம்ருதம்.	உ	௦	௦
ஈஶ்வரதத்த்வஸம்ஸ்தாபநஸஹித ஸ்தோத்ரத்ரயம் [டீகா.	௦	கஉ	௦
ப்ரஹ்மதர்கஸ்தவ:- ஶைவாத்விவரணம்.	௦	அ	௦
ஶ்ருதிஸூக்திமாலா- தத்வ்யாக்யா.	௦	ச	௦
ஶிவகர்ணாம்ருதஸ்துதிவ்யாக்யா	௦	எ	௦
ஶிவபாதாதிகேஶாந்தஸ்துதி:	௦	க	௦
நாராயணாதவைதஸமந்த்ரஸஹவ்யாக்யா.	௦	உ	௦
ஶாரதாஸ்துதிஸமந்த்ரஸஹவ்யாக்யா:	௦	உ	௦
வேதாந்தஶைவஸங்க்ரஹ:	க	௦	௦
ரத்நத்ரயபரீக்ஷா வ்யாக்யா.	௦	உ	௦
பஞ்சரத்நஸ்துதிவ்யாக்யா.	௦	க	௦
வாதநக்ஷத்ரமாலா.	௦	க	௦
ஆதித்யஸ்துதி: ராமாயணஸாரஸங்க்ரஹ.	௦	௦	சா
ஶிவகர்ணாம்ருதம்	௦	ச	௦
ஆதித்யஸ்துதி: ஶிவநாமாவளி	௦	௦	சா
நாராயணாஸ்தகம்.	௦	௦	சா
ஸாரஸங்க்ரஹஸஹிதாஷ்டகம்,	௦	அ	௦
ஶ்லோகத்ரயீவ்யாக்யா	௦	க	௦
ஸௌந்தர்யலஹரீ	௦	ரு	௦
ஶங்கரவிஜயம்.	௦	சா	௦
ஜகந்நாதாஷ்டகம்.	௦	சா	௦
தக்ஷிணாமூர்த்யஷ்டகம்.	௦	க	௦
ஶிவராத்ரிநிர்ணய:	௦	உ	௦
விஶ்வநாதாஷ்டகம்ப்ரபாவ:	௦	க	சா
பதஞ்ஜலிவிஜய:.	௦	ங	௦
வ்யாஸாஷ்டகம்.	௦	௦	சா
ஶ்ருதிஸூக்தி	௦	க	௦
ஸூக்திவசநம்.	௦	க	௦
ஸூக்திஸங்க்ரஹ:. நாமாவலி:	௦	உ	௦
கம்பநவதவசநம்: ஸூக்திவலி:	௦	சா	௦
ஶிவஸஹஸ்ரவிஜய:? ஷை	௦	சா	௦
விஷ்ணுஸஹஸ்ரநாமஸ்தோத்ரம். ஷை	௦	க௦	௦

Chidambaram:—Printed and Published for the Proprietor at the Brahmavidya Press, No 76. Senkalooneer Pilliar koil Street.

ப்ரஹ்மவித்யா.

பத்திரகிரயம்.
1-வருஷம் 2 12 0
6-மீ 1 8 0
3-மீ 0 14 0
1-காபி 0 2 6
இலங்கைக்கு 3 8 0

ப்ரம்மவித்தியா பத்திரிகை.

BRAHMAVIDYAPATHRIKA.

பத்திர கிரயத்தை மணியார்டராகவாவதல்லது ரூபா 1-க்கு. அணு 1-சேர்த்துத்தபால்லேபிலாகவாவது சிதம்பரம்ப்ரம்மவித்தியா ப்ரெஸ் மானேஜருக்கு அனுப்பவேண்டும்.

மாதம் இருமுறை பிரசுரஞ் செய்யப்படும்.

ஸத்யம் ப்ரஹ்மேதி வேதவேதாந்தவாக்யைகதாநிக:॥ ஸஸங்கம் ப்ரஹ்மேதி வேதவேதாந்தஸம்மோஹவிஷ்ணுதி॥

ச-ம புத்தகம்] சிதம்பரம்:— கஅகூ௰ஹு ௴ கரு [இலக்கம் - ௰அ

பத்ரிகாவிஷய:.

க. யேதாவதாவகாஶே ஸதீயாம் பத்ரிகாம் தஜ்ஜிஜ்ஞாஸூனாம்ஹீயமானாம்ப்ரேஷயித்வா பாஷாஜ்ஞாத்ரயம் ப்ரேஷணாஞ்ச ஸர்வேஷாம் ஸௌஜந்யம் காயமனோவாக்பி: ஸ்து-

உ. தத்யதாரோஹபத்ரிகாத யோகிவைவ்யா:

ங. ஸுயா:பத்ரிகாஸ்வத்த பத்ரிகாயாம் நிவேஶயிதும் ப்ரேஷ்யதே, தாஸாம் ஸாராம் காகமேவ லேகக: ஸம்பாதஷ்யா விவேச்யா: யதோ வேளம்ஷிஷிஷணம் நதாஸாமிஹாவகாஶ:-

ச. ஸ்வயமேபத்ரிகாக்ராஹகா: தேஷாம் நாமயாமாதி ஸ்பஷ்டமேவ லிகித. பதிவ: ஸ்தானாந்தராயாந: தஸ்ய ஸம்யம் விஜ்ஞாபநீயம்.

ரு. ஸ்வயமத்யதிகம் விஷய: ஜிஜ்ஞாஸ்யதே தஹி- ஸம்ப்ரேஷ்யாயகார்டம் ஸ்வயமவதீர்ணீ வீதி காஸ்ஞ்ஞாநதே.

சா. ஸ்வயதிப்ரேஷிதா: லேகாவிகாரணே நந ப்ரகடிக்ரியந்தே நவாநஷ்டா: ப்ரேஷ்யந்து.

எ. ஸ்வயதி நவாஸார்த்யநம் நப்ரேஷ்யதே பத்ரிகா.

இதி.

ரா. நாராயணாய்ய:

நிர்வாஹக

சிதம்பரம்

பத்திரிகாவிதானங்கள்.

க. பத்திரிகை வேண்டுவோர் ப்ரம்மவித்தியாப்ரெஸ் மானேஜருக்கு முன்பணமாகவேயனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

உ. கடிதமுதலியவைகளும் மேற்படிமானேஜருக்கே அனுப்புதல்வேண்டும்.

ங. பத்திரிகையிற் பிரசுரிக்கும்பொருட்டு அனுப்பப்படும் கடிதங்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில் நல்லமைகொண்டு, சுத்தரூபமாகவும், பொதுவிருத்திக்கேற்றதாகவும் எழுதப்படல்வேண்டும். தூஷணமடங்கிய கடிதங்கள் இடம்பெறு.

ச. கையொப்பக்காரர்கள் ஊர் பெயர் முதலியவைகளை நன்ருக எழுதியனுப்புதல் வேண்டும. வேறு ஊர்களுக்குப்போக நேரிடின் அவ்விலாசத்தை அறிவித்தல் வேண்டும்.

ரு. இன்னும் இதைப்பற்றிவிவரம் அறியவேண்டுவோர் அரையணு லேபிலாவது ரிப்பிளை கார்டாவது அனுப்பித்தெரிந்துகொள்ளலாம்.

சா. அனுப்பப்பட்ட கடிதங்கள் எவ்வித அசௌகரியத்தினுலாவது பிரசுரிக்கப்படாவிடில் திரும்பவும் வாப்சு செய்யப்படா.

எ. முன்பணம் அனுப்பாதவர்களுக்கு பத்திரிகை யனுப்பப்படமாட்டாது.

ரா. நாராயணசாமி ஐயர்,
மானேஜர்,
ப்ரம்மவித்தியா ப்ரெஸ்,
சிதம்பரம்.

[illegible]

ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்:—விகிருதி-ஹூ வைகாசி-மீ ௩௨

மறுமை.

"இவை எங்குள்ளன" இக்கேள்வியால் நாத்திகர் அடையும் கருத்து இது. இப்பூமண்டலத்தின் இயல்பை நாம் இயன்றமட்டில் சோதித்துப்பார்த்தும் அது ஓர் உருண்டை வடிவமாகவே காணப்படுகிறபடியால் அவ்வித உலகத்தில் மேற்புறத்து எங்கும் ஜனங்கள் நிறைந்திருப்பதால் இவ்வித 'சுவர்க்கம்' 'நரகம்' இவ்விரண்டும் ஏதோ சாமானிய ஜனங்களைப் பயமுறுத்தவேண்டிய எவரோ எழுதிவைத்ததாயிருக்கவேண்டும். அல்லது உலகவியற்கையறியாத கண்மூடிகளான முன்னோர் தம புத்தியிற்றோன்றியபடி எழுதி வைத்திருக்கவேண்டும். இல்லையாகில் இவ்விந்திய முதலான தேசங்களைச் சுவர்க்கமாகவும், மற்றைய சில தேசங்களை நரகமாகவும் எண்ணி எழுதியிருக்கவேணும். இனி வீட்டில் கதைகள் சொல்வதில் கீழேழுலோகங்களை விசுவசித்து அதைப்பற்றி நரகம் இருப்பிடத்தை யெழுதினும் எழுதியிருக்கலாம். அல்லது பூமி உருண்ட வடிவமல்ல, தட்டையாயும் முக்கோண வடிவமாயுள்ளது; அது சூரியனையுமாதல் சூரியன் அதையுமாதல் சுழன்றுவருவதில்லை. நக்ஷத்திர சக்கரமும் மேலுங்கீழுமாகச் சுழலாது. பின் சூரியன் ஒரு பெரிய ஒற்றைச் சக்கரத்தில் உட்கார்ந்துகொண்டு மகாமேருவென்னும் தங்கமலையைச் சுழன்றுவருகிறான். ஆகையால் அவனுக்குமேல் சுவர்க்கமும் கீழ்நரகமும் இருக்கின்றது என்று தாம் அறிந்த சித்தாந்தத்தையே எழுதிவைத்தனரோ! இல்லையெனில் "உண்மை சுவர்க்கம் நரகம் என்பன சொன்மாத்திரையேயன்றி இல்பொருள்" எனறறிந்தும் "சாமானிய ஜனங்கள் பாபவழியை விட்டு விலகமாட்டார்கள், அவர்களுக்கு இது அவசியம்" என்று எண்ணி "நரகம் அனேகம்; அவை யமபுரிக்கருகில் இருக்கின்றன; அதற்கும் பூமிக்கும் இவ்வளவு தூரம்; நடுவில் ஏதேதோ இருக்கின்றது; தேவலோக உயரத்தில் இருக்கும்" என்பதாதியாக எழுதிக் காருடம்முதலிய புராணங்களிற் சேர்த்தனவோ, அல்லது பூமியில் யாம் அடையும் இன்பதுன்பங்களையே உருவகப்படுத்தி இன்பத்தைச் 'சுவர்க்கம்' என்றும் துன்பத்தை 'நரகம்' என்றும் வழங்கினரோ? பாருங்கள்! பராசரர் "பெண்கள் அனுகூலமாய் நிற்றலே சுவர்க்கம், அங்ஙனமின்மையே நரகம்" என்றும் வழங்கினர். ஆதலின் ஒருவித நிச்சயமாய் இதுவே சுவர்க்கம், இதுவே நரகம்

[illegible]

என்று குறிக்க இயலாமையால் அவை இருக்கும் விஷயம் எமக்குச் சமுசயமே. இனி அவை இருப்பதுண்மையாயின் அவ்விடம் போய் வரக்கூடாவிடினும் அவை உள்ளவிடமாவது அறியப்பட்டிருக்கலாம்" என்பது. இங்களிக்கற்பாலதாகிய சமாதானமிது. இப்பூமண்டலத்துள்ள ஒவ்வொரு மதஸ்தரும் சுவர்க்கம் நரகம் இவை உண்டென்று ஒப்புகிறார்கள். அங்ஙனம் அவை முறையே இன்பதுன்பங்களை அனுபவிக்கும் இடம் என்றும் சொல்லுகிறார்கள். மேலும், புண்ணியவானுக்குச் சுவர்க்கம் என்பதும் பாவிக்கு நரகம் என்பதும் அவர் ஒப்பியதே. ஆயினும் எந்தப் புறத்தேச சித்தாந்தியேனும் நரகம் இத்தன்மைத்து இங்குள்ளது எனத்துணிந்து கூறினரில்லை. இனி ஆராயின் ஏதோ கிறிஸ்தவர் புத்தகத்தில் ஓரிடத்து நரகம் என்பது 'தீ' எனவும், சுவர்க்கம் (பரமண்டலம்) ஓர் ஊர்போன்றது. அங்கு தேவதூதர்களும் மோக்ஷமடைந்தவர்களும் வசிப்பார்கள் என்றும் சொல்லப்படுகிறது. அங்ஙனம் மகமதீயரும் நரகம் என்பது அக்கினியாய் இருக்கும் என்றும் மோக்ஷவுலகம் சுகமாயிருக்குமென்றுங் கூறுவர். யவனர் பௌத்தர் இவர்களும் சுவர்க்க நரகங்களை ஒப்பினார்கள். இவர்களில் ஒருவரேனும் "இவை எங்குள்ளன"வென எழும் வினாவுக்கு விடையளிக்க வல்லவரல்லர். முற்காலக் கிறிஸ்தவர் எங்கோ பூமிக்குக் கீழேயிருப்பதாய் வழங்கிவந்தார்கள் இப்பொழுது பூமி உருண்டையாயிருப்பதை யறிந்து அதற்கேற்றபடி சொல்ல முடியாமல் எங்கோ வேறிடம் இருப்பதாய்ச் சொல்லுகிறார்கள். ஆயின் இவரால் இக்கேள்விக்கு விடைபகர்ந்திட வியலாது. சமத்துள்ள இவர்கள் சொல்வதே சர்வமதஸ்தர்களும் சொல்வாரென்று எண்ணி இவர் விடையளிக்கக்கூடாதொழிந்தவிடத்துத் தாம் திருப்தியடைந்து அதே முடிவான சித்தாந்தமாகக் கட்டிக்கொண்டார்கள். ஆயின இங்கு விசாரிக்கவேண்டியது ஒன்றுண்டு. ஏதோ சிலர் இல்லையென வாதிப்பரேல் அதுமட்டில் அதன் உண்மை வீணில் ஒழியாது. விசாரித்தால் அவற்றின் உண்மை நன்குபுலப்படும். பாருங்கள்! யாம் கண்கூடாகக் காணும் நக்ஷத்திரங்களெல்லாம் ஒவ்வொரு அண்டங்களென நாம் உரைப்பின் அதைத் தடுத்து வாதாடவெழும் சோதகர் ஒருவருமில்லை. இனி அவைகளைச் சோதித்தால் சில நீராலமைந்தன; சில நிலத்தாலமைந்தன; சிற்சில தீயால் அமைந்தன. இனி நீராலும் தீயாலும் அமைந்தனவேயென்று அவற்றில் நிலமில்லையோ? உண்டு. மிகுதியைப்பற்றி அங்ஙனங் கூறியது காண்க. அவற்றுள் யாம் வசிக்கும் பூமியைப்போன்றன அங்காரமண்டலம் முதலிய சில. எமக்குப் புலப்படும் சந்திரமண்டலம் என்னும் தண்ணீர்மண்டலம்போலியன வியாழன் மண்டலத்தருகிலுள்ள நான்மண்டலங்கள்போ

[illegible]

ன்றன. (ஆராய்ந்தால் வியாழன் அருகில் நான்கு சந்திரமண்டலங்கள் இருக்கின்றன) இனித் தீயாலமைந்த சூரியமண்டலம் போன்றன கிருத்திகாமண்டலம் முதலியன. இவற்றுள் சிலவிடங்களில் சூரியகிரணம் படும்; சிலவிடங்களுக் கெட்டாது. அங்ஙனமே சில அண்டங்களில் தண்ணீர்ப் பெருககால் துன்பம்; சிலவிடங்களில் கெப்பமிகுதியால் துன்பம்; சிலவிடம் சீதம் உஷ்ணம் சமமாதலின் சுகம். இனி நிலம் தீ நீர் இவை உறைந்து கனமாவது போல் வாயுவும் கூடுமாதலின் அதைப்பற்றி அவ்வித அண்டங்களும் உண்டென்பார் சிலர். அங்குள்ளோர் சரீரம் நமது காற்றில் அகப்படும் சிறிய பிராணிகளின் சரீரத்தைப்போல லகுவாயுள்ளது. (அதாவது பெரிய உருவமாயினும் பஞ்சுபோல் அதிக கனமில்லாதது) இனி இவ்வித விசித்திர வமைப்புகளுடன் கூடிய வண்டங்களின் தத்தமினங்களைத் தாம் இயக்கும் வலியால் இங்கிருந்தங்கும் அங்கிருந்திங்கும் போக்குவரவுப் பிராணிகளுக்குண்டு. ஆகையால் இவையிருக்குமிடம் பூமியைச் சுற்றிலும் என்று ஏற்பட்டது. நிற்க. இவை எங்கு எவ்வளவு இருக்கின்றது என்னும் விஷயம் வேதாந்த விசாரத்தில் எடுத்து விடுப்பாம். ஆதலாற்றான் யாம் மாபாரதத்தைப்பற்றி எழுதிய மகோபந்நியாசத்தில் அர்ச்சுனன் சுவர்க்கத்திற்குப்போன கதையில் ஸ்ரீமத் வேதவியாச மகரிஷி வசனத்தை எடுத்துக்காட்டி அங்கு நக்ஷத்திரங்கள் அண்டங்கள் எனத்தீர்மானித்தோம். ஆயின் இப்பூமண்டலத்தின் அருகே சுவர்க்கம் நரகம் இவை இருப்பதாய்த் துணியப்பட்டது. நம்முன்னோர் ஏதோ அவை தீயால் அமைந்தனவே யென்று நம்பினார்களில்லை. நரகங்கள் இருபத்தொரு வேற்றுமை பெற்றனவென்றும் சுவர்க்கங்கள் இருநூற்றிருபத்துநான்கு பேதங்கள் உள்ளனவென்றும் சொல்வார். ஆங்காங்கடையும் இன்ப துன்பங்களின் வேறுபாடுமெட்டில் அவரவர் நன்னெறி தீயநெறிகளின் பயனென்றறிக. இனி மற்றவர் புஸ்தகத்தில் பூமிமுதலியவற்றின் சிருஷ்டிபோலவே நக்ஷத்திரம் சூரியன் சந்திரன் இவர்களைச் சிருஷ்டித்ததாக ஏற்படுகிறபடியானும் அவர் புஸ்தகங்களில் எங்கும் வேறு அண்டங்கள் இருக்கும் பிரஸ்தாபமே இன்மை. அவர் இவ்விஷயத்தில் நாத்திகரை வெல்லார். நமது சாஸ்திரங்களிலோ "சந்திர உலகத்தைப் பெறுவான்" என்பதாதி வேதவாக்கியங்களாலும் இன்னும் பலவிடங்களில் லோகாந்திர சரித்திரமிருப்பதாலும் சாந்தோக்கியம் முதலிய உபநிடதங்களில் "சூரியமண்டலத்தில் கரியநிறமுள்ளது கிலம்" எனக்குறிக்கப்பட்டமையானும் அண்டாந்திரங்கள் பலவுளவென்பது நன்குபுலப்படும். இவைகட்குப் பொதுப்பெயர் "த்யுலோக:" 'த்யுலோகம்' என்பது வடமொழியில் வழங்குவது. ஆதலின், நமது பூமண்டலத்தின்

[illegible]

கீர்வாண பாஷா.

ஜ்யோதிஷம்.

ஆர்யா:!

[illegible]

அருகில் அவையுள்ளன என்பது பசுமரத்தாணியாக்கப்பட்டது. ஆதலாற்றான் மாபாரதம் சபாபருவத்தில் திக்குப்பாலகர் சபைகளைக் கூறுமிடத்து அவைகளின் பிரமாணம் அவை சுழன்றுவரும் வழி அவற்றினியல் இவை சொல்லப்பட்டன. உதாரணமாக இந்திரலோகம் இருபதுயோஜனை கனமுள்ளது. வெப்பத்தாலமைந்தது. நிலையில்லாது சுழல்வது என்று எழுதப்பட்டது. ஆதலின் ஆராய்ச்சியில் மிகுந்த நம்முன்னோரான மகாரிஷிகள் நன்கு இவ்விஷயங்களை வேதக்கண்ணாற்கண்டறிந்து அவ்விதமே நம்மவர் எல்லோரும் நல்லொழுக்கம் பெறவேண்டி மிக அன்புடன் நூன்முகத்தில் வைத்த விஷயங்கள் இவையாதலால் நூலாராய்ச்சி குறைந்த மேற்றிசையார் கூறும் எவ்விதக் குற்றங்களும் இங்கடாதொழியுமென்றே கொண்டு களிகூர்வீர்களாக. இனி மூன்றாவது விஷயத்தைப்பற்றிச் சிறிது விசாரிப்போமாக.

வரும்.

ஸம்ஸ்கிருதபாஷை.

சோதிடம்.

ஐயா,—யாம் முறையே வேதாங்கங்களைப்பற்றி எழுதிவரும் இப்பெருந் தொடர்பில் இப்பொழுது இங்கு எமக்கு வழியிலகப்பட்டது வேதாங்கங்களுட் சிறந்த சோதிடம். எவ்வித புத்திசாலிகளுக்கும் மயக்கம் கொடுக்கும் இச்சோதிட விஷயத்திலும் எமதிறகை நடத்துவது மிகவும் பெரிய துணிபே. என்னையெனின், அது வேதத்தின் முகம்; முகமின்றி யாதும் எங்கேனும் நடக்குமா? அஃதின்றி வேதங்களைப் படித்தும் பயனில்லை. வேதங்களிலோ ஒவ்வொரு காலங்களில் ஒவ்வொரு கன்மங்கள் சொல்லப்படுகின்றன. அக்கன்மங்களை நன்கனுட்டித்து யாம் நற்கதியடைய விரும்புகிறோம். அதற்குக் காலவறிவு முக்கியம். அஃதறியாவிடம் அக்கன்மம் பயன்படாது. "ஆதலின் இவற்றை அறிவதும் மிகக்கடினம்; இவற்றைக் காருணிக்கவேண்டும்" என்று எண்ணிக் கருணைக்கடலாய ஸ்ரீசூரியன் முதலிய ஆசிரியர்களால் வேதாங்கங்களுள் முதன்மை பெற்றதாய் இது எடுத்து வகுத்தருளப்பட்டது. ஆயினும் நேரில் பூமியில் மானிடவடிவங்கொண்ட வியாழனோ என வியக்கத்தக்க எமது நண்பர் ஸ்ரீவெங்கிடேசதீக்ஷிதர், ப்ரம்மஸ்ரீ சுநதரேசுவரசிரௌதிகள் இருப்பதால் யாம் அவர் பலங்கொண்டு மற்றவர் இதுகாறுமறியாத ஒரு பெரிய கொள்கையை நாட்டினும் நாட்டுவோம். சோதிடத்தில் வடமொழியிற் பற்பல நூல்களுள. அவற்றின் காலம், அவற்றின் கர்த்தா, அவற்றின் விஷயங்கள் இவைகளைப்பற்றி நிரூபணஞ்செய்வது சாமானியமல்லவாயினும் எமக்கு எட்டியமட்டும்

[illegible]

ட்டில் தக்கவர் சகாயங்கொண்டு எழுதிவர முயல்வாம். இச்சோதிட வலியாற்றான் முற்காலத்தவராய நம்முன்னோர் மகரிஷிகள் முக்காலவறிவும்பெற்றுச் சர்வஞ்ஞரா யிருந்தனர். இக்காலத்திலோ சில ஆமபுத்திகள்கூடி நாங்கள் சோதிட மறிந்தவரெனச் சொல்லித்திரிந்து "பூசாரிகள் மந்திரசாஸ்திரத்தைக் கெடுத்ததுபோலச்" சோதிடத்தின் பெருமையைக் கெடுத்து வாயில்வந்ததைப்பிதற்றித்திரிகின்றார்கள். இவ்வாமபுத்திகள் சிறிதும் இலக்கியங்களைப் படிப்பதேயில்லை. முழுவழுச்சொற்களாய் எழுதியவன் பெயர் தெரியாத சில குறைச்செய்யுட்களைச் சொல்லிக்கொண்டும், வயிற்றுப் பிழைப்புக்கு இஃதோர் வழியாக வைத்துக்கொண்டும் வெளிவந்தனர். இவர்களுக்குக் கணிதம் சிறிதும் தெரியாது. கோளசாஸ்திரம் இருந்த ஊரில் இவர் குடியிருந்ததில்லை. "ஓரை" என்னும் அருமையான விஷயம் இவர் அறிந்திலர். யாம் முற்கூறிய எவரோ அறிவிலிகள் எழுதியதும் பெயரில்லாததும் சிதல் விழுங்கி மிகுதியுமான ஒரு சிறு புத்தகத்தைக் கையிலேந்தி அச்சமயத்துக்கேற்பச் சொல்லிக்கொண்டு எல்லா ஜனங்களுக்கும் சோதிடத்தில் அவனம்பிக்கையினை விளைவித்தனர். இக்காலத்தோ கலிமகிமையால் விசேஷமாய் ஆசாரங்கள் தொலைந்துவர இவ்விதம் காலவறிவும் தப்பியதெனின் இனி வேண்டிய குறை யாதுமில்லை. ஆயின் இக்காலத்துப் பண்டிதர்கள் அவசியம் உண்மையை விசாரிக்காவிடில் மோசம் வந்தது வந்ததேயாய்விடும். கன்மலோபம் வந்தால் ஆரியத்தன்மையே ஒழியும். கன்மத்தை ஒழித்த ஆரியன் எவனும் இங்கிலன். அக்கன்மத்தின் முதலங்கமான காலவிஷயத்தில் தற்காலத்தவர் அடையும் வேறுபாடுகளைப்பற்றிச் சிறிது கவனியுங்கள்! ஒரு கணிதவித்துவான் இன்று பஞ்சமி என்றால் மற்றொருவன் இன்றே ஷஷ்டி என்பான். ஒரு கணிதஞ்ஞன் சூரியன் ஓர் ராசியிற் பிரவேசித்தான் என்றால் மற்றவன் இல்லையென வாதிக்கிறான். ஒருவன் ஒன்றெழுதுவதினால் அதுபோல் தான் எழுதிவைப்பது தனக்கு மிக அவமானம் என்று நினைத்துத் தோன்றியபடி எல்லாம் எழுதுகிறார்கள். முன்னொருவன் ஒன்றெழுதின் பின் வருபவன் அதை மறுத்தே மற்றொன்றெழுதுவான். ஆயின் இவர்களுக்குப் பாவத்திற் சிறிதும் பயமில்லை. இவர் இக்காலத்தவர்க்கு விசேஷமாய்ச் சோதிடத்திற்பயிற்சியின்மையை யறிந்து தத்தம புத்திக்குத் தோன்றியதெல்லாம் எழுதிவைக்கிறார்கள். இக்காலத்துப் பண்டிதர்களோ ஏதோ வயிற்றுப்பிழைப்புக்கெனச் சில சாஸ்திரங்களைப் படித்துத் தங்களைப்போல் வீணில் சண்டைசெய்து கதறிக் காணக்கூடிய எவ்விதப்பயனுமற்ற புஸ்தகங்களைத் தவிர்த்து மற்றெந்தப் பிரத்தியக்ஷ சாஸ்திரங்களையும் படிப்பதில்லை. யோகம், மந்திரம், சோதிடம், வைத்தியம் இவைமுதலிய பல நூல்கள் பிரத்தியக்ஷமா

[illegible]

யப் பயனளிக்கத் தக்கனவென நம்முன்னோர் எடுத்து எழுதிவைத்தனர். இவ்விதம் எல்லோரும் அறிஞர்களும் அறிவிலிகளுங்கூட அறிந்தானந்திக்கத்தக்க பிரத்தியக்ஷ சாஸ்திரங்களையே காக்க வலியற்ற நம்மவர் எவ்விதம் ப்ரம்மவித்தையைக்காக்க வலியடைவரோ அறியேம். இவர்களுக்குக் கண் என்பது ஒன்று நல்லபடி சோதிடத்தில் வரும் எவ்வித ஆக்ஷேபங்களையும் தீர்க்க முதற்கருவியாயிருந்தும் இனி இவர்களுக்கு ஷஷ்டி பஞ்சமி முதலிய பதங்களுக்குப் பொருள் அறிந்திருந்தும் தாக்ஷணியத்தால் அதை வெளியிடாமல் உட்கார்ந்துறங்குகிறார்கள். இவ்வருமைபூண்ட சோதிடசாஸ்திரம் இக்காலத்தில் விசேஷமாய்த் தென்னாட்டில் ஒழிந்தே போயிற்று. சித்தாந்தம், சங்கிதை, ஓரை என்னும் மூவகையிலும் நன்கு பயின்றவொருவர் இக்காலத்தகப்படுவதங்கு கடினமாயிற்று. இவர்களுட்பரீக்ஷயின்மையால் யாவரும் எல்லாம் அறிந்தவராகவே அபினயிக்கிறார்கள். நெடுத்த காலமாய்த் தென்னாட்டவர்க்கு ஒரு குற்றமுண்டு. அதாவது தாம்நன்கறிந்த ஒரு வித்தையுடன் இல்லாமல் எல்லாவிஷயங்களிலும் தலைநுழைப்பார்கள். "ஒரு வித்தையாயினும் முற்றிலும் வந்தது" என்றிராது ஒவ்வொன்றிலும் சிறிதுசிறிது பயின்று ஒன்றையும் முற்றிலும் அறிந்திரார். இனி யாம் இங்கு இவ்விதம் எழுதியதால் ஸ்ரீமன்னார்குடியில் வசிக்கும் ஸ்ரீமகாமகோபாத்தியாய விருதுபூண்ட பெரியோர்களும் இதிலடங்கார்கள். எங்ஙனமெனில் எவ்வித விதிக்கும் ஒரு விலக்குண்டாதலின் இங்கு எடுத்துக்காட்டியபடி எல்லோரும் தென்னாட்டில் "பலவற்றிற் பயின்று ஒன்றிலும் நிறைவுபெறாதவர்" என்பதற்கு அவர்களே விலக்கு. இனி இவ்விதம் உள்ள வித்துவான்களைச் சோதிடவிவாதத்தில் மத்தியஸ்தராக்கினால் நொண்டியைக் கால்வரிசைகளைக் கண்டுபிடிக்க அனுப்பின சங்கதிபோல் முடியுமென்பதற்கும் ஐயமுண்டோ? அங்குள்ள உண்மை இது. இச்சோதிடம் என்னும் சாஸ்திரம் சொன்மயமே. ஆயினும் அதை நிகண்டு முதலியவற்றையே கொண்டு பொருட்படுத்துவதமையாது. அதற்கென இடுகுறிகள் பலவுள. இனி அவ்வளவு இடுகுறிகள் இல்லாமலும் அந்நூல் முடிபெய்துவது மிகக்கடினம். ஆதலின் பெரியோர் வழியில்வந்த பொருளே ஒப்பவேண்டும். இனி எனக்குப் பெரியோர் சொன்ன பொருள் இதுவேயென்று ஓர் விவாதம் நேர்ந்தால் அங்கு எந்தவழி சூரியசந்திராதிகதி ஒத்துவருமோ அதுவே உண்மைப்பொருள் எனக்கொள்ளவேண்டும். ஆதலாற்றான் "சோதிடம் பிரத்தியக்ஷநூல், அதற்குச் சாக்ஷி சூரியசந்திரர்கள்" என்று பெரியோர்கூறுவர். இனி நூலறிவால் சந்திரன் சூரியன் இவர்களின் கதி யறியவேண்டும். இவைகளையறிந்தே சாஸ்திரார்த்தம் துணியப்படவேண்டுமே

[illegible]

ன்பதால் முற்றிலும் ஒன்றையொன்று பற்றுகின்றதே அது குற்றமாமேயெனில், அங்ஙனமில்லை. முதலில் கண்ணால் சூரியசந்திரர் கதியை நிச்சயித்துப் பிறகே சாஸ்திரார்த்தத்தைத் துணிந்து மறுபடி நூலாராய்ச்சியால் வருங் கால நிலைகளையறிதல் என்பதெப்படி? ஆயின் இதற்குமுதற்பிரமாணம் கண்ணே. ஆதலின் இனிக கோளசாஸ்திரங்கள் எங்ஙனமாயினுமாகுகவென்று கண்களை மூடித்தோன்றியபடிசுவடிகளைப் படிப்பவர்க்கு, தர்க்கசாஸ்திரவழியறியாதவையாகரணன் 'அவச்சேதகம்' என்னும்பதத்திற்கு 'வெட்டுவது' எனப்பொருள்கொண்டதுபோல் விபரீதார்த்தம்வந்து முடியும், என்பதுதிண்ணம். ஆதலால்கேவலம் இலக்கண இலக்கியங்களைமட்டில் அறிந்தவர்க்கு இந்நூல் பொருள்படுவதரிது. மற்றுப் பொருள்களைச் சோதிப்பவர்க்கே பொருள்படும் என்றுணர்க. பாருங்கள்! உலகத்தில் ஒரேதினம் ஒருமுறை சூரியன் கீழ்த்திசையிற் புறப்பட்டு மேற்றிசையடைவதாய் எல்லோரும் எண்ணுகிறார்கள், சோதகராயுள்ளவர் இவ்விதத்தோன் சோதிவழியாய சக்கிரப்புரளலால் என்றும் பூமியின் புரளலால் என்றும் அறிவார். ஆயின் விஷயம் வேறுபடும். ஆதலின் இக்காலத்தவர் அதை ஒருவழியறியாமையால் ஒதுக்கினும் அதன் சொரூபம் விஷயம் இவைகளைப்பற்றி எழுத ஆரம்பிக்குங்கால் இழுக்கற்றசிலர் அதிற்பயிலினும் பயில்வர். அதனுலாயினும் இன்னுஞ் சிறிதுகாலத்திற்கு நன்னூல்கள் இத்தேசத்தில் இருக்கக்கூடும். நமது தேசத்துக்கு ஒருமேம்பாடும் கிடைக்கும். அறிஞர்காள் ஆராயுங்கள். இக்காலத்தில் நம்மவர் சோதிடத்தில் அடைந்துவரும் விவாதங்களை அறிந்து சில மேற்றிசையார் சோதிடம் எமக்குச்சொந்தமில்லையென்றும் அதை முதலிற் கண்டுபிடித்தவர்கள் கிரேக்கரே என்றும் அதற்கடையாளம் அனேகம் உண்டு என்றும் சாதிக்கிறார்கள். 'திரேக்காணம்' முதலிய சொற்கள் அங்கு அவர் பாஷையினின்றே வந்தனவெனவும் ரோமகசித்தாந்தம் ஒன்றிருப்பதும அதற்குக்காரணம் எனவும் சொல்லுகிறார்கள். இவர்கள் எவ்விதம் எழுதி நம்மவரைத்திட்டினாலும் அதற்குப் பதிலளிக்கச் சக்தியற்ற நம்மவர் ஒருசமயம் எவனேனும் ஒருவன் இந்நூலை நன்காராய்ந்து அதிற்கண்டவழியால் நடுக்கரட்டுமுட்டுகளை விலக்கி ஆமயுத்திகள் கூற்றையகற்றி யுண்மையைக்காட்டி நிலைநாட்டின் அதை ஒப்புவதுமில்லை, சம்மதிப்பதுமில்லை. அம்மட்டோ! அதைத்தூஷிக்கவும் தாமே முன்னுக்குவருவார்கள். இனி அவர் முன்னோர் சொற்களில் மிக ஆவலுற்றவராயின் ஏன் அவர் மேற்றிசையார் கேள்விகளுக்கு விடையளித்தாரில்லை. மற்றவரைக் காணுவிடத்து நம்மவர் மகாபண்டிதர்களே. நமது பிள்ளைகளே இப்பொழுது விசேஷமாய் ஆங்கிலேய பாஷையைக்கற்று அதன் வழி

[illegible]

ப்படும் அதிலும் மேற்றிசையார் கூற்றை வேதமாய் நம்பி எவ்வித ஆரியாசாரத்திலும் உறுதியற்றவராகிறார்கள். அவர்கள் விஷயத்தில் நந்தேயத்துப் பண்டிதர்கள் அறிவு சிறிது உதவுவதில்லை. இக்காலத்துக் கணிதவித்துவான்களால் நாம் செய்யும் கிரியைகள் காலம்மாறிவருகின்றன. இனிச் சிறிது தினங்களுக்குப்பின் எவ்விதக் கிரியையும் இங்கிலீஷிற்றானே மொழிபெயர்க்கப்படும். அதன்பின்னும் கன்மம் நிற்குமோ? ஆயின் உலகவிருத்தாந்தம் அறிந்தவர்க்கு இது அவசியமே என்பது எமது துணிபு. இனி மேற்றிசையார் கூற்றை ஒருவாறொழித்து மேல் நமது வாதத்தைக் கைக்கொண்டு அந்நூல்களில் உள்ள விஷயங்களை வெளியிடுவோம். இனி அவர் சொல்லியபடி ஏதோ கிரேக்கர்களே இதை முதலில் கண்டார் என்பது அவர் பாஷையினின்று ஒரு பதம் ஸம்ஸ்கிருதபாஷையில் வந்ததென்பதும் எக்காலமும் ஒப்பத்தக்கதல்ல. இந்தப் பாஷை தனக்குவேண்டிய எவ்வித பாகங்களிலும் பூரணமாதலின் அத்தன்மையுள்ள பாஷை எங்குமின்மையால் இது மற்றவிடம் கடன்வாங்குவது உசிதமன்று. மற்று இச்சோதிடம் வேதாங்கமாதலாலும், வேதம் இக்காலத்துதித்ததென இதுவரையிலுள்ள சோதகர்களால் துணியப்படாமலும் அவ்வேதத்திற்றானே "ஆருணகேதுகத்தில்" ககோளவமைப்புச் சொல்லப்பட்டமையாலும் அவ்வேதத்துடன் கூடவே சோதிடமிருப்பதாய் ஏற்பட்டிருப்பதாலும் அதிசமீபகாலத்தில் ரோமாபுரியின் அருகிற் குடியேறின சிலர் இதைக்கண்டுபிடித்தாரென்பது யாங்ஙனம் ஒவ்வும்? கிரேக்கர் இப்பொழுதுதே கிறிஸ்து பிறக்க (உசு) இரண்டாயிர வருஷங்களுக்கு முன்னரே ரோமாபுரியையடைந்ததாய் அத்தேச சரித்திரக்காரர் சொல்லுகிறார்கள். அதற்குமுன் அக்கிரேக்கர் நமது தேசத்தில் "ராஜக்கிரகம்" என்னுமிடத்திலிருந்தவர். இவர்களுக்கு முன் பெயர் "கிரவுஞ்சிகர்" என்பது. இவர் இங்கிருந்தகாலத்தில் நவக்கிரகங்களையே பூஜித்துக்கொண்டிருந்தவர்கள். இவர் மேற்றிசை சென்றும முன் வாசனையால் அந்நவக்கிரகங்களையே பூஜித்துவந்தனர். பிறகு (உசு) இரண்டாயிரம் வருஷங்களுக்குப்பின் ஏசுவின் சீடரான "பால்" என்பவன் இவர்களைக் கிறிஸ்தவராக்கினான் என்று பைபில் சொல்லுகின்றது. இனி அவர்கள் இந்தியாவில் இருக்கையிற்றானே நவக்கிரகங்களை யாராதித்தார்கள் எனில், இச்சாஸ்திரம் அக்காலமே உண்டெனில் அது எங்ஙனம் இவர்கண்டதாகும். ஆதலாற்றான் அவர் ரோமாபுரி யடைந்த பிறகும இத்தேசவாசனையால் சில நூல்களை யெழுதவும் படிக்கவும் திறம் சிறிதுகாலம் இருந்தது. "கஸ்தூரி வாசனையைக் கழுவினல் ஒழியுமோ?" ஆதலாற்றான் ஆரியசித்தாந்தத்திற்குப்பின்னரே ரோமகர் சித்தாந்தம் பிறந்தது

[illegible]

மேலும் எந்த நூலையும் அறிவதால் பயனென்றிருப்பின் அதையறிய முயல்வர். அங்ஙனம் அவர்க்குபயோகமுள்ள விஷயம் சோதிடத்தில் இல்லை. திதிகள் முதலியவற்றால் அவர்க்கேது பயன். அவர் கன்மங்களை விட்டவர்களல்லவா? அவர்களே அதை முதலிற் கண்டாரெனில் அதை நம்மவரெவ்வாற்றானும் வேதாங்கமாக ஒப்பார். வேதபாகியர் செய்த ஓர் கிரந்தத்தைத்தொடவுங் கூடக் கூச்சமுறும் நம்மவரா அதை ஒப்புவர்? ஆயின் ஆராய்ச்சியில் நம்முன்னோராய மகரிஷிகளே தாம் அவ்வக்காலத்துக் கிரகநிலைகளையறிந்து பின்வரும் யாமறியும்படி கருணையால் ஏடுகளிலெழுதிவைத்தார்களென்பது திண்ணம். ஆதலாற்றான் சித்தாந்தங்கள் அவ்வக்காலங்களிற் காணப்படும் வேற்றுமைகளுடன்கூடித்தருமசாஸ்திரங்களைப்போல் தகுந்தபடியெடுத்தோதப்பட்டன. அவைகளும் இப்பொழுது அனேகம் அகப்படுகின்றன. அவற்றுள் பழயதும் எல்லாவற்றிற்கும்முதனூலானதும் விரிந்ததுமானது சூரியசித்தாந்தம். அதற்கு முதனூல் "ஆருணகேதுகம்" என்னும் வேதபாகமும் ஸர்வவித்தியாசாரம் என்னும் ஆக்கினேய புராணமும் அவ்வக்காலத்து முனிகள் இயற்றியபடியே இது வேதாங்கமாகநின்றது. ஆயின் இது அவசியம் அறியத்தக்கது. இனிப் புத்தர் இதை முதலிற் கண்டாரென்பதும் இதனாற்றானே மறுக்கப்பட்டதென்றறிக. இனி அவரும் ராஜக்கிரகத்தின் அருகில் குடியிருந்தமையால் அவ்விஷயம் அவர் அறிந்திருப்பினும் இருப்பார். இங்ஙனம ஜைனர் பூமி சுழல்வதாய் முதலிற் கண்டாரென்பதும மறுக்கப்படும. இனிச் சில ஜைனர் பூமி ஏதோ கீழே போவதாய்ச் சொல்வது நமது சாஸ்திரங்களுள் அகப்படாததே. ஆயினும் அது யுக்திக்கொவ்வாது. அடிக்கடி சூரியனிடம சமீபிப்பதாகவே யுக்தியால் ஏற்படும். அவ்வழியைப்பற்றிப் பின்வரும்.

வைதிகவர்ண நிர்ணயம்.

ஐயா பத்திரிகாநண்பர்காள்!

இப்பரதகண்டத்தில் வருணங்கள் (பிராமணர் முதலிய சாதிகள்) அநாதியிற்றானே தோன்றி யனுட்டானத்தில் இருக்கின்றனவென்றும் அவை இக்காலத்தில் விசேஷமாய் அநாரியர் ஆசாரம் மலிந்தும் விட்டொழிக்கக்கூடா நிலைமையில் இருக்கின்றனவென்றும் நீங்கள் அறிந்த விஷயமல்லவா! சிலர் ஒருசமயம் விட்டொழிக்க எவரேனும் முயன்றால் அவர் தன் இனத்தார் தன் தொழில் முதலியவற்றை ஒழிக்க நேரிடுகிறது. ஆயினும் இக்காலத்துதித்த சில பண்டிதர்கள் இவ்விஷயத்திற் கூறும்

[illegible]

சிற்சில வாக்ஷேபங்களுக்கு ஏதேனும் சமாதானமளித்து அவற்றின் பயனை ஒருவாறு விளக்கின் அதுவிஷயத்தில் இக்காலத்தவர்க்கு ஒருவாறு நம்பிக்கை யதிகமாம். ஆதலின் அவ்விஷயத்தைப்பற்றி எழுதத்துணிந்தோம். எங்ஙனமெனின் "இவ்வித ஏற்பாடு எங்கும் உண்டு" என்றும் "இவ்வித ஏற்பாட்டில் எத்தேசத்திலும் க்ஷேமம் விசேஷம் உண்டாகாது" என்றும் "எதுவனாயில் இது இத்தேசத்தில்வழங்கிவந்ததோ அதுவனா எமது தேசம் க்ஷேமமடைந்தது" என்றும் "இது காலவளவில் அடங்காது வேதங்களிற்றானே குறிக்கப்பட்டது" என்றும் "இவ்விஷயத்தில் வேதங்கள் பிரமாணங்களே" என்றும் இதற்குண்மையிலாராய்ந்தால் நற்பயனுண்டு; இது எல்லோருக்கும் பேரின்பமளிக்க வளமையுடைத்து" என்றும் "ஒற்றுமை கொடுக்கும்" என்றும் "எக்காலத்தும் மாற்றக்கூடியதல்ல" என்றும் "அது பிறப்பாலும் கன்மத்தாலும் தவத்தாலும மூவகைப்படும்" என்றும் "அதனாற்றானே எமக்கு ஆரியத்தன்மைகிட்டிய" தென்றும் "அஃதொழியின் ஆரியத்தன்மை ஒழியும்" என்றும் இவ்விஷயங்களில் ஒவ்வொன்றிற்கும் எவ்வளவு பிரமாணங்கள் அகப்படுமோ அவைகளை முறையேஇங்கெழுதுவாம். "எங்ஙனமெனில் இவ்வித ஏற்பாடு எங்கும் உண்டு" என்பதல்லவோ முதல் பிரதிஞ்ஞை. அதைப்பற்றிச் சிறிது விசாரிப்பாம். இக்காலத்தில் இவ்விஷயத்தில் விவாதப்படுகிறவர் ஐவர். கிறிஸ்தவர், மகமதியர், பௌத்தர், யவனர், ப்ரம்மசமாஜியர் என்பவர்களே. இவர்களும் ஆதியில் இவ்வித ஏற்பாடுகளை ஒப்பியவரே. பாருங்கள் ! ஆதிகாலத்தில் கிறிஸ்தவர் புஸ்தகத்தில் பழைய ஏற்பாட்டிற் சொல்லியபடி ஏதோ ஒருசமயம் கடவுள் தானே எட்டுக்கோத்திரங்களை வகுத்தார் என்றும், ஒரு சாதிவிட்டு மறுசாதியில் நடந்த ஒரு விவாகத்தைப்பற்றிக் கோபித்தார் என்றும் சொல்லப்படுகின்றது. புதிய ஏற்பாட்டில் ஏசுவின் பிதா தச்சன் என்றும் தாய் இடைச்சியென்றும் அக்காலத்தில் ஏசுவை வளர்த்தவர்கள் இடையர்களென்றும் அவர் சீடருள் மூத்தவர் செம்படவரென்றும் ஒருவாறு குறிக்கப்பட்டிருக்கிறது. அவ்விதம் மகமதியர்களுக்கும் சைத், சயத், மொகல், பட்டான் என்று நாலு சாதிகளுண்டு. யவனர் பௌத்தர் இவர்களுக்குள்ளும் சிற்சில பேதங்கள் இருக்கின்றன. சிலர் ஆசாரியர்கள் எனவும் சிலர் சிஷர்களெனவும்பௌத்தர்களுள் வழக்கம். இனி இவர்கள் "ஏதோ பெயர்மாத்திரையில் இந்த ஏற்பாடு வைத்துக்கொண்டோமேயன்றி மற்றப்படி எல்லோரும் ஒன்றாய்க் கலந்துட்கார்ந்து புசிப்போம், மற்றேதும் செய்வோம்" என்பரேல் அதையும உற்றுநோக்கிற் பொய்யென்றே வெளியிடுவோம். பாருங்கள்! இத்தேசத்துப் புதிய கிறிஸ்தவர்களுடன் மேற்றிசையிற் பிற

[illegible]

வாவஸ்

ந்த எந்தக்கனவானும் நீனி தின்பதில்லை. மகமதியர்களுள்ளும் பட்டான் சாதியார் லவிமார்கள் என்பவர்களுடன் புசிப்பதில்லை. யவன பௌத்தர்களில் குருமார் சீடர்களுடன் புசிக்கார்கள். ஆயினும் இச்சாதியார்களில் மகமதியரைத்தவிர்த்து மற்றவர் பெண்களையும் விதிவிலக்கில்லாது மணம்புரிவர். அதுவும் சாதி என்பது தகப்பனைப்பற்றியே வருமென்றறிந்த நம்முன்னோர் கையாடிவந்த விஷயமே. முற்காலத்திற் பிராமணர்முதலிய மூவர் வீட்டிலும் சூத்திரர் சமைப்பதும் உண்டு. ஆயின் அது ஏன் ஒழிந்ததெனில் அவ்வித சாதிகளில் சாங்கரியருமிருப்பதாயெண்ணி மெதுவாக ஒழித்துக்கொண்டார்கள். இனி உத்தர தேசங்களில் விசேஷமாய் அன்னஞ்செய்வதை யொழித்து மற்ற எந்தவிதத் தூண்டுதலும் அவராற்றுன் நிறைவேற்றப்படுகிறது. அவ்வித வாசாரமும் இத்தேசத்தில் முன்னிருந்ததே. இத்தேசத்தில் விக்கிரமாதித்த மகாராஜன் பிறப்பதற்குமுன் வரையில் பிராமணர் நான்கு வருணங்களிலும் விவாகம் செயவித்தல் என்பதுவழங்கிவந்தது. அதனாலே பிராமணத்தன்மையொழிந்திலது. அவர்களிடம் விசேஷமாய் இருந்ததேயன்றி வேறில்லை. பாருங்கள்! விக்கிரமாதித்த ராஜன் தகப்பன் மிகப்பெரியவர். நேரில் பதஞ்சலிமாமுனியின் மற்றொரு அவதாரமே இவனெனச்சிலர் வழங்கும்படி அவ்வளவு அறிவிற் சிறந்தவர். ஆயின் இவ்வித ஏற்பாடு எங்குமிருப்பதால் இது சர்வஜன சம்மதமென்றே கொள்வோமாக. ஆதல்பற்றி மகாஜனங்கள் சென்றதே வழியெனப் பெரியோர் கூற்றை ஒருவாறு ஆராயின் இவ்விஷயம் அனுதியெனபதில் எப்புத்தியானும் ஐயமுருன்நிற்க. இனி மற்றதைப்பற்றி விசாரிப்பாம். "இஃதில்லாவிடத்துத் தேசத்தின் க்ஷேமம் குறைவு" என்பது எவ்விதமெனில் கூறுதும். இது வேதோ நம்மவர்க்கு ஒற்றுமை யொழிக்க வந்த ஏற்பாடாகச் செய்ததல்ல. நன்மைககாகச் செய்ததே. என்னையெனில் இவ்விதசாதிமுறை உள்ளவிடத்தில் அவரவர் தொழில் அவரால் காக்கப்படுமாயின் எந்தக்காலத்திலும் உலகத்துக்கு வேண்டிய எவ்விதத் தொழில்களும் மாருவாயின் உலகஞ்செழிக்கு மென்பதான்ருேர் கருத்து. பாருங்கள்! இக்காலத்தில் விசேஷமாய் ஆங்கிலேய பாடையும் நடையும் உடையும் பரவியிருப்பினும் முற்றிலும் தத்தம் தொழிலை விட்டவரோனும் விட்டு அதில் விசுவாசமற்றவரோனுமில்லை.

வரும்.

[illegible]

[illegible]

ஓர் குருவின் கஷ்டம்.—சென்னையில் பிராமணர்களல்லாத வைஷ்ணவ சமூகத்தில் குருபீடம்வகித்தவரான ஏகாங்கிஸ்வாமிகள் என்பவர் தொந்தரவிலகப்பட்டுக் கொண்டிருக்கிறதாக ஒரு நிருபகேசர் "ஹிந்து"ப்பத்திரிகைக் கெழுதியிருக்கிறார். இவர், ஒரு செட்டியாருக்கு ௪00-ரூபாய்க்கு உண்டிப்பத்திர மெழுதிக் கொடுத்திருந்ததாகவும், இந்தத் தொகையைத் திரும்பிப்பெற அவர் ஸ்மால்காஸ்கோர்ட்டில் பிராதுசெய்து தீர்ப்புப்பெற்றிருந்ததாகவும், இத்தீர்ப்பை நிறைவேற்றச் சென்றவாரம ஸ்வாமிகள்பேரில் வாரண்டு பிறப்பிக்கச்செய்ய ஸ்மால்காஸ்கோர்ட்டு வாரண்டுச் சேவகன் சென்ற புதன்கிழமை சாயந்திரம் இவரைப்பிடித்து இராத்திரி ௰-மணிவரையில் அவருடைய சிஷர்கள் யாராவது அவருக்கு உதவிசெய்வார்களாவென்று பார்க்க அவர் அழைத்துக் கொண்டுபோன சில சிஷர்கள் வீட்டிற்கு அவரோடுசென்றபின், கடைசியில் அவர் யத்தனம் பயன்படாமை கண்டு இராத்திரி ௰-மணிக்குமேல் அவரை ஸிவில்ஜெயிலுக்கிட்டுக்கொண்டு போனதாக அறிகிறோம். ஏகாங்கிஸ்வாமிகள் கடனுக்கு பாத்திரமான விவரம்: வாதியாகிய செட்டியை ரசவாத பரீக்ஷைகள் செய்வதில் ௪௱-ரூபாய் அளவுக்குச் செலவிடும்படி செய்ய அப்பரீக்ஷைகள் பயனின்றி விருதாவிற் சென்றமையால் அச்செட்டிக்குத்தான் உண்டாக்கிய நஷ்டத்துக்கு ஈடாகச் சுவாமிகள் அவருக்கு ௪௱-ரூபாய்க்கு உண்டிப்பத்திரம் எழுதிக் கொடுத்தாராம். அதுகாரணமாக இப்பொழுது அவர் தொந்திரவிலகப்பட்டுக்கொள்ள நேரிட்டது.

[illegible]

[illegible]	௨	௦	௦
[illegible]	௦	௮	௦
[illegible]	௦	௪	௦
[illegible]	௦	௭	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௨	௦
[illegible]	௦	௨	௦
[illegible]	௧	௦	௦
[illegible]	௦	௨	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௦	௬
[illegible]	௦	௪	௦
[illegible]		௦	௬
[illegible]	௦	௦	௬
[illegible]	௦	௮	௦
[illegible]	௦	௯	௦
[illegible]	௦	௫	௦
[illegible]	௦	௬	௦
[illegible]	௦	௬	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௨	௦
[illegible]	௦	௩	௦
[illegible]	௦	௦	௬
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௧௨	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௬	௦
[illegible]	௦	௬	௦
[illegible]	௦	௰	௦
[illegible]	௦	௮	௦
மறுபிறப்பு.	0	0	6
நீதிக்கீர்த்தனை.	0	1	6
ஆசௌசவிதி.	0	2	0
ஆன்மாவும் சரீரமும்.	0	0	6
ஆனந்தநடராஜர்பேரில்பாடியசிவசங்கர தீக்ஷிதர் கீர்த்தனம்.	0	0	6
இராமலிங்கப்பிள்ளை பாடிய அற்புதக்கீர்த்தனை	0	0	6
திருக்கழுமலமும்மணிக்கோவை.	0	0	6
ஆனந்தநடராஜர்பேரில் அழகிய கீர்த்தனம்.	0	2	0
சுப்பிரமணியர் உற்பவமும் சூரசம்மாரமும்.	0	0	6
சர்வஜனரஞ்சித மனமோஹனஜாவளி, பதம்.	0	0	6
வீதிவிடங்கன் சரித்திரச்சுருக்கம்.	0	0	3

Chidambaram;—Printed and Published for the Proprietor at the Brahmavidya Press, No. 76. Senkalooneer Pilliar koil Street.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

பத்திரகிரயம்.
1-௵ 2 12 0
6-மீ 1 8 0
3-மீ 0 14 0
1-காபி 0 2 6
இலங்கைக்கு 3 8 0

ப்ரம்மவித்தியா பத்திரிகை.

BRAHMAVIDYAPATHRIKA.

பத்திரா கிரயத்தை மணியார்டராகவாவது ஒரு ரூபா 1-க்கு அணா 1-சேர்த்துத் தபால்லேபிலாகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியா ப்ரெஸ் மானேஜருக்கு அனுப்பவேண்டும்.

மாதம் இருமுறை பிரசுரஞ் செய்யப்படும்.

[illegible] ‖ [illegible] ‖

௪-ம புத்தகம்] சிதம்பரம்:— ௪அ௯௰௵ ஜூன்மீ ௧௫ [இலக்கம் - ௰௯

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

[illegible]

[illegible]

[illegible]

ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்:—விகிர்தி௵ வைகாசிமீ ௨௰௨

வைதிக வர்ண நிர்ணயம்.

தொடர்ச்சி.

மேலும் அவ்வச்சாதியார் விசேஷமாய்த் தத்தம் தொழிலே மேலான தொழில் என்றும், அது தனக்குப் பெருமை யென்றும் எண்ணியே காப்பாற்றிக்கொண்டு வருகிறார்கள். சிலர் தத்தம் தொழில்களை விடாது நடத்தியும் வருகின்றனர். இதற்குப் பயன் வயிற்றை நிரப்புதலே யெனில், சில சமயம் மற்றவர் இகழ்ந்ததுபோல்வழங்கும் எவ்விதத்தொழிலும் ஒழிந்துபோக நேரிட்டாலும் நேரிடும். பாருங்கள்! சாதியைப்பற்றித் தொழிலேற்பட்டதவிடமான ஆங்கிலேய ராஜ்ஜியத்தில் அம்பட்டன் தொழில் தானே செய்துகொள்ள நேர்ந்தது. பாருங்கள்! நம் தேயத்தைப் போலிருந்தால் இவ்விதமாகுமா? (இப்பொழுதும் அவர்கள் பேசுவதில் I Shave நான் சிரைக்கிறேன் என்று வழங்குவது வழக்கம்) இனி நாம் வருணங்களை விட்டால் ஒருசமயம் நமக்கும் நமது வீட்டிற்கும் செய்யவேண்டிய எத்தொழிலையும் யாமே செய்ய நேரிடும். நேர்ந்தால் முடிவுபெறுதுண்மை. இனி அதனாற் றான் குறைவு யாதெனில், நேற்றுத் தெருவிற் குப்பைகளைச் சேர்த்துக்கொண்டிருக்கும் ஒருவனை அதே சாதியிற் பிறந்த கடவுளிடம் அன்பால் ஆசாரிய பதவியைப்